திணிக்கவில்லை என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

5. அறிக்கைகள் அளித்தல்

(அ) பொது நிறுவனங்கள் குழு

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *குழுக்களின் அறிக்கைகள் அளித்தல், பொது நிறுவனங்கள் குழுவின் அறிக்கை அளித்தல். மாண்புமிகு உறுப்பினர் திரு. வி. சோமசுந்தரம், பொது நிறுவனங்கள் குழுவின் தலைவர் அவர்கள்.*

***திரு. வி. சோமசுந்தரம்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

"கேடில் விழுச்செல்வம் கல்வி ஒருவற்கு
மாடல்ல மற்றை யவை"

என்ற குறளுக்குப் பொருள் சேர்ப்பதைப்போல, கல்வியே அழிவில்லா சொத்து என்பதால், மாணவர்கள் தடையில்லாமல் கல்வி பயில பல்வேறு பொறியியல் கல்லூரிகளையும், தொழில்நுட்பக் கல்லூரிகளையும், கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளையும் இந்த ஆண்டே துவக்கிட உத்தரவிட்ட தாயுள்ளம் கொண்ட தமிழக முதல்வர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய பொற்பாதங்களை வணங்குகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

2011—2012 ஆம் ஆண்டிற்கான பொது நிறுவனங்கள் குழுவின் 20 முதல் 23 வரையிலான நான்கு அறிக்கைகளைக் குழுவின் சார்பாகப் பேரவைக்கு அளிக்கிறேன்.

(ஆ) அரசு உறுதிமொழிக் குழு

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *அரசு உறுதிமொழிக் குழுவின் அறிக்கை அளித்தல். மாண்புமிகு உறுப்பினர் திரு. என்.டி. வெங்கடாச்சலம், அரசு உறுதிமொழிக் குழுவின் தலைவர் அவர்கள்.*

திரு. என்.டி. வெங்கடாச்சலம்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

2012 ஏப்ரல் 19][திரு. என்.டி. வெங்கடாச்சலம்]

'கன்றின் குரலும், கன்னித் தமிழும் சொல்லும் வார்த்தை அம்மா, அம்மா.
கருணை தேடி அலையும் உலகில் உருகும் வார்த்தை அம்மா, அம்மா.
எந்த மனதில் பாசமுண்டோ அந்த மனமே அம்மா, அம்மா.'
(மேசையைத் தட்டும் ஒலி)

முற்பகல் 11—40

எங்களுடைய ஈரோடு மாவட்டம், என்றைக்கும் மாண்புமிகு தமிழகத்தினுடைய ஒப்பற்ற முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய எஃகுக் கோட்டையாகத் திகழ்ந்து கொண்டிருக்கிறது.

ஈரோடு மாவட்டம், மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களிடம் என்றைக்கும் நிறைந்த விசுவாசம் கொண்ட மக்கள் நிறைந்திருக்கின்ற மாவட்டம். (மேசையைத் தட்டும் ஒலி) "இறைவனிடம் கையேந்துங்கள்" என்று இஸ்லாமியர்கள் சொல்வார்கள்; "தட்டுங்கள் திறக்கப்படும், கேளுங்கள் தரப்படும்" என்று கிறிஸ்தவர்கள் சொல்வார்கள்; "கேட்டதும் கொடுப்பவனே கிருஷ்ணா, கிருஷ்ணா" என்று இந்துக்கள் சொல்வார்கள். தட்டாமலே, கேட்காமலே இன்றைக்குத் தமிழ்நாட்டினுடைய ஒப்பற்ற முதலமைச்சர் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் (மேசையைத் தட்டும் ஒலி) ஒரு சாதாரண எளிய தொண்டனாகிய என்னை இந்தச் சபையில் சட்டமன்ற உறுப்பினராக்கி, என்னுடைய கோரிக்கையைக் கனிவோடு பரிசீலித்து, எங்களுடைய மாவட்டத்திற்கு பெருந்துறை தொகுதியிலே ஒரு Polytechnic கல்லூரியைக் கொடுத்த மாண்புமிகு முதல்வர் புரட்சித் தலைவி அவர்களே, இந்தச் சித்திரைத் திருநாள் எங்களுக்கெல்லாம் ஓர் ஆனந்தமான திருநாள். சித்திரை பிறந்தவுடன் ஈரோடு மாவட்டத்து மண்ணிலே பிறந்த தீரன் சின்னமலை அவர்களுக்கு சங்ககிரிக் கோட்டையிலே மணிமண்டபம் அமைத்திட மாண்புமிகு அம்மா அவர்கள் உத்தரவிட்டார்கள். (மேசையைத் தட்டும் ஒலி)

இரண்டாவதாக, எங்களது ஈரோடு மாவட்டத்திற்கு ஒரு Polytechnic கல்லூரியை இப்பொழுது தந்திருக்கிறார்கள். மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களே, உங்களை

நெஞ்சார, மனதார வணங்கி, இந்த சாதாரண தொண்டனுடைய கனிவான வேண்டுகோளையும் ஏற்ற, தாயுள்ளம் கொண்ட உங்கள் பாதங்களைப் பணிந்து, நன்றி மலர்களை உங்கள் பாதங்களில் வைக்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 2011–2012 ஆம் ஆண்டுக்கான அரசு உறுதிமொழிக் குழுவின் 3 முதல் 7 வரையிலான ஐந்து அறிக்கைகளை குழுவின் சார்பாகப் பேரவைக்கு அளித்து அமர்கின்றேன்.

(இ) பேரவைமுன் வைக்கப்பட்ட ஏடுகள் குழு

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவைமுன் வைக்கப்பட்ட ஏடுகள் குழுவின் அறிக்கைகள் அளித்தல். மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆர். சின்னசாமி, பேரவைமுன் வைக்கப்பட்ட ஏடுகள் குழுவின் தலைவர் அவர்கள்.

திரு. ஆர். சின்னசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்தின் விடிவெள்ளி, இந்தியாவின் வழிகாட்டி, மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் என்னை ஏடுகள் குழுவின் தலைவராக நியமித்ததற்கு கோடானுகோடி நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

ஒரு காலத்திலே "கல்விக் கண் திறந்தவர் காமராஜர்" என்று சொல்வார்கள். இன்றைக்கு யாரும் எதிர்பார்க்காத அளவுக்கு கல்வியிலே மிகப் பெரிய புரட்சியை உண்டுபண்ணுகிற அளவுக்கு, இந்த 2012 ஆம் ஆண்டு "கல்லூரிகளின் கண்களைத் திறந்தவர் புரட்சித் தலைவி அம்மா" என்கிற நிலையை உருவாக்கி, இன்றைக்குத் தமிழகத்திலே புரட்சித் தலைவி அம்மா அவர்கள் ஒரு சரித்திரம் படைத்திருக்கிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) அவர்களுக்குத் தமிழக மக்களின் சார்பாகவும், என் சார்பாகவும் மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 2011–2012 ஆம் ஆண்டிற்கான பேரவைமுன் வைக்கப்பட்ட ஏடுகள் குழுவின் இரண்டாவது அறிக்கையைப் பேரவைக்கு அளிக்கிறேன்.